

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | பிப்ரவரி 03, 2022 | புரட்சி 21 | முழக்கம் 03 | விலை: ரூ.3.00


# அமெரிக்காவில் ஜாதி எதிர்ப்பு இயக்கம்: உ.பி.–பீகாரில் இந்துத்துவா மாயை விலகுகிறது

## கடந்த வாரம் வெளி வந்த சில முக்கிய செய்திகள் குறித்து ஒரு பார்வை

அமெரிக்க பல்கலைக்கழகங்களிலும் இந்து பார்ப்பனியத்தின் ஜாதியப் பாகுபாடு நுழைந்து விட்டது. இதனைத் தொடர்ந்து பாகுபாடு எதிர்ப்புக்கான பல்கலைக்கழகக் கொள்கையில் ஜாதியையும் கலிபோர்னியா பல்கலைக்கழகம் சட்டப்பூர்வமாக அண்மையில் சேர்த்திருக்கிறது. பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் அமைப்பு, ஜாதி - ஒரு பாகுபாடு என்றும், பல்கலை வளாகத்துக்குள் இது தடை செய்யப்பட வேண்டும் என்றும் தனது கொள்கையாக ஏற்கனவே அறிவித்திருந்தது. பேராசிரியர்கள் கோரிக்கையை இப்போது கலிபோர்னியா பல்கலைக்கழகமும் ஏற்று தனது சட்டப்பூர்வ விதியாக்கியுள்ளது. பல்கலைக் கழகத்தின் இந்த நடவடிக்கைக்கு அமெரிக்கன் இந்து சம்மேளனம் என்ற மதவாத அமைப்பு எதிர்ப்பு தெரிவித்திருப்பதோடு ஜாதி என்று தனியாக பெயர் குறிப்பிட்டு சட்டத்தில் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை என்று கூறியிருக்கிறது. தலித் மற்றும் மைனாரிட்டி மக்களுக்கான உரிமைகளுக்குப் போராடும் அமைப்பு, அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் ஜாதி அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவதை ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டி பாகுபாட்டுக்கான தடைகளில் ஜாதியையும் இணைக்க வேண்டும் என்று தொடர்ந்து போராடி வந்தது.

சமத்துவத்துக்கான கூடம் (Equality labs) எனும் அமைப்பின் நிர்வாக இயக்குனர் தேன்மொழி சவுந்தர்ராஜன், அமெரிக்காவின் 23 பல்கலை வளாகங்களில் ஜாதிப் பாகுபாடுக்கெதிரான சிவில் உரிமை அமைப்புகள் தொடங்கப்பட்டுள்ளன என்றும் அவை ஜாதி பாகுபாடுகளுக்கு எதிராகத் தீவிரமாக செயல்பட்டு வருவதாகவும் கூறியுள்ளார். உயர்தொழில்நுட்ப சர்வதேச மய்யமான கலிபோர்னியாவில் உள்ள 'சிலிக்கான் வேலி'யில் தலித் பொறியாளர்களுக்கு எதிரான ஜாதியப் பாகுபாடுகளை எதிர்த்து அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கிற்குப் பிறகு ஜாதி அடிப்படையிலான பாகுபாடுகளுக்கு உள்ளானவர்கள் விவரங்களைத் தெரிவிக்க முன் வந்துள்ளனர் என்றும் கூறியுள்ளார் தேன்மொழி. கூகுள், ஆப்பிள், மைக்ரோசாப்ட், சிஸ்கோ உள்ளிட்ட பல தொழில்நுட்ப நிறுவனங்களில் ஜாதி அடிப்படையில் பாகுபாடுகள் காட்டப்படுவது குறித்து அமெரிக்க ஏடுகளில் செய்தி வெளி வந்து கொண்டிருக்கின்றன.

பார்ப்பனர்கள் தமிழ்நாட்டிலிருந்து திராவிடர் இயக்கக் கொள்கைகளால் அமெரிக்காவுக்கு துரத்தப்பட்டார்கள் என்று சில பார்ப்பன அறிவுஜீவிகள் எழுதுகிறார்கள். அமெரிக்கா வந்த பார்ப்பனர்கள் 'இந்து' சனாதனத்தை இங்கேயும் தூக்கிக் கொண்டு வந்து பாகுபாடுகளை உருவாக்கும் அதிகாரச் செல்வாக்கோடு செயல்படுகிறார்கள். கல்வி நிலையங்கள் மட்டுமின்றி சமூகத்திலும் ஜாதியப் பாகுபாடுகள் மோசமாகி விட்டது என்பதை சுட்டிக் காட்டும் சமத்துவத்துக்கான அமைப்புகள் அமெரிக்காவில் மாநிலங்களுக்கான கூட்டாட்சி சட்டங்களிலேயே 'பாகுபடுத்தும்' அமைப்பாக ஜாதியையும் இணைத்து ஜாதி என்பதையே குற்றமாக்க வேண்டும். அப்போதுதான் தெற்காசிய சமூகம் முன்னேறவே முடியும் என்று வலியுறுத்தி வருகின்றது.

(ஆதாரம்: 'இந்து' ஆங்கில நாளேடு வெளியிட்ட ஆய்வு (ஜன.30, 2022))

### உ.பி. – பீகாரில் 'இந்துத்துவா' மாயை விலகுகிறது

உ.பி., பீகார் மாநிலங்களிலிருந்து இதுவரை போராட்டம், கலவரம் தொடர்பான செய்திகள், மதவெறி, ஜாதி வெறி குறித்தவைகளாகவே இருப்பது வழக்கம். மாட்டுக்கறி வைத்திருந்தால் அடித்துக் கொள்வார்கள். 'தலித்' துகள் செருப்பு போட்டால் - அடிமை வேலை செய்ய மறுத்தால் கட்டி வைத்து சித்திரவதை செய்வார்கள். பெண்களை உயிருடன் எரிப்பார்கள். இப்படி மதம் - ஜாதி - பெண்ணடிமை என்று ஊறிக் கிடந்த உ.பி. - பீகார் மாநிலங்களிலிருந்து வேலை வாய்ப்பு உரிமை கேட்டு இளைஞர்கள் பல்லாயிரக்கணக்கில் வீதிக்கு வந்து போராடும் காட்சிகளை தொலைக்காட்சிகள் ஒளி பரப்பி வருகின்றன. இந்திய இரயில்வே துறையில் தொழில்நுட்பம் சாராத 35,281 வேலைகளுக்கு 125 இலட்சம் இளைஞர்கள் மனு செய்திருந்தனர். இதற்காக நடத்தப்பட்ட தேர்வுகளில் மோசடிகள் நடந்ததைத் தொடர்ந்து இளைஞர்கள் வேலை கேட்டுப் போராடுகிறார்கள். வடநாட்டுக் கலாச்சாரத்துக்கேற்ப தொடர்வண்டியையே தீ வைத்து எரித்துள்ளனர். கடந்த ஜனவரி-மார்ச் 2020இல் மட்டும் இம்மாநிலங்களில் மாத ஊதியம் பெறும் வேலைகள் 2.4 சதவீதம் குறைந்துவிட்டது. குறிப்பாக இளைஞர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். உ.பி., பீகார் மாநிலங்களில் வேலை வாய்ப்புகள் தேசிய சராசரியைவிட குறைவாக இருப்பதாகவும் குறிப்பாக பீகாரில் மேலும் மோசமாக நான்கில் ஒருவர் வேலை இழந்து விட்டதாகவும் இதே காலகட்டத்தில் தமிழ்நாடு குஜராத்தில் வேலைச் சந்தையில் 44 சதவீதம் பேர் பயன் பெற்று வருவதாகவும், 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடு தலையங்கம் தீட்டியுள்ளது. முஸ்லிம் எதிர்ப்பு, மதவெறி என்ற 'இந்துத்துவா' கொள்கையிலிருந்து இளைஞர்கள் விழித்துக் கொண்டு தங்களுக்கான வேலை வாய்ப்பு, வாழ்வுரிமையை நோக்கி சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள் என்றும் தமிழ்நாட்டில் நடக்கும் 'திராவிடன் மாடல்' ஆட்சி மருத்துவக் கல்லூரியில் மாணவர் சேர்க்கையில் பிற்படுத்தப்பட்டோருக்கு இந்தியா முழுமைக்கும் 27 சதவீத இடஒதுக்கீட்டை தமிழ்நாடு முதல்வர் சட்டப் போராட்டம் நடத்திப் பெற்றுத் தந்த உரிமைகள் அவர்களை சிந்திக்கச் செய்துள்ளது என்றும், கிராமங்களில்கூட சமூக வலைதளங்கள் வழியாக பெரியார், அம்பேத்கர், பூலே போன்ற தலைவர்கள் வேகமாக அறிமுகமாகி வருவதாகவும் அம்மாநிலங்கள் குறித்து ஆங்கில ஊடகங்கள் கட்டுரைகளை வெளியிட்டு வருகின்றன. இதை உறுதிப்படுத்துவதாக இளைஞர்கள் வேலை கேட்டு நடத்தும் போராட்டம் அமைந்திருப்பதாக அரசியல் பார்வையாளர்கள் கருதுகிறார்கள்.

### ஆக்கிரமிப்பு கோயில்கள்: உயர்நீதிமன்றம் முக்கிய தீர்ப்பு

"கடவுள் அங்கு இங்கு என்பதில்லாமல் எங்கும் நிறைந்திருப்பவர். கடவுள் தனது சக்தியை ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்தால் மட்டுமே வெளிப்படுத்த முடியும் என்ற அவசியம் இல்லை. சில கடும்போக்காளர்கள்தான் மதத்தைப் பயன்படுத்தி மக்களிடையே மோதலை உருவாக்கி வருகிறார்கள் என்று சென்னை உயர்நீதிமன்றம் சிறப்பான தீர்ப்பை வழங்கியிருக்கிறது. நீதிபதிகள் எஸ். வைத்தியநாதன் மற்றும் டி. பரதசக்ரவர்த்தி இத்தீர்ப்பை வழங்கியுள்ளனர். பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை கிராமத்தில் தேசிய நெடுஞ்சாலையில் போக்கு வரத்துக்கு எதிராகக் கட்டப்பட்டிருந்த கோயிலை அகற்றக்கோரி கோயில் அறக்கட்டளையினருக்கு நெடுஞ்சாலைத் துறை தாக்கீது அனுப்பியது. கோயிலை அகற்றக் கூடாது என்றும், நீண்ட காலமாக கோயில் இருந்து வருகிறது என்றும் பக்தர்கள் உணர்வைப் புண்படுத்தும் என்றும் நீதிமன்றத்தில் பெரியசாமி என்பவர் வழக்கு தொடர்ந்தார்.

மனுவைத் தள்ளுபடி செய்த உயர்நீதிமன்றம் நெடுஞ்சாலைத்துறை அனைத்து சாதி, மதம், இனத்துக்கும் சொந்தமானது. அதில் ஒரு குறிப்பிட்ட மதத்துக்குரிய கோயிலைக் கட்டி சொந்தம் கொண்டாட முடியாது. மனுதாரர் விரும்பினால் அவருக்கு உரிமையுள்ள சொந்த இடத்தில் கோயிலைக் கட்டிக் கொள்ளட்டும். எங்கும் நிறைந்திருக்கிற சர்வசக்தியுள்ள ஒரு கடவுளுக்கு ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்தால் மட்டுமே சக்தியை வெளிப்படுத்த முடியும் என்ற அவசியமே இல்லை" என்று உயர்நீதிமன்றம் மிகச் சிறப்பான தீர்ப்பை பகுத்தறிவு மற்றும் பொது மக்கள் நலன் சார்ந்த பார்வையில் வழங்கியிருக்கிறது.

## 'சமூக நீதிக் கூட்டமைப்பு'க் காலத்தின் கட்டாயம்

தமிழ்நாடு முதலமைச்சர் அகில இந்திய அளவில் சமூக நீதிக்கான கூட்டமைப்பை உருவாக்கும் முயற்சிகளில் இறங்கப் போவதாக அறிவித்திருக்கிறார். இது உண்மையிலேயே பாராட்டி வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். அனைத்து மாநிலங்களிலும் உள்ள ஒடுக்கப்பட்ட பிரிவுகளின் தலைவர்களை உள்ளடக்கி இந்த அமைப்பு உருவாக்கப்படும் என்றும் முதலமைச்சர் கூறியிருக்கிறார். அகில இந்திய கோட்டாவில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீதம் இட ஒதுக்கீடு கிடைப்பதற்கு, சட்டப் போராட்டம் நடத்தி இந்திய ஒன்றிய அளவில் 4000 இடங்கள் கிடைப்பதற்கு கதவுகளை திறந்து விட்டது தமிழ்நாடு அரசும், தமிழ்நாடு முதலமைச்சரும் தான்.

இதை ஆந்திரா, மகராஷ்டிரா, பீகார், உ.பி, மேற்குவங்கத்தைச் சேர்ந்த சமூக நீதித் தலைவர்கள் காணொலி வழியாக கடந்த 26.01.2022 அன்று நடந்த, மு.க ஸ்டாலினுக்கு பாராட்டு விழா மற்றும் சமூக நீதி இயக்கத்துக்கான ஒருங்கிணைந்த தேசிய திட்டம் கருத்தரங்கில் பாராட்டி வரவேற்று இருக்கிறார்கள்.

இந்தியா என்பது தற்போது ஒற்றை ஆட்சியை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறது. அதுவும் இந்துக்களின் நாடாக மாற்றவும் முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. குடியரசு நாள் அணிவகுப்பில் வந்த ஊர்திகளை பார்த்தாலே இந்தியா என்பது இந்துக்களின் நாடு தான் என்று இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிராக மோடி ஆட்சி பிரகடனப்படுத்தி இருக்கிறது. இதற்கு மாற்று சமூக நீதிக்கான களம் ஒன்று மட்டும் தான். சமூக நீதியும், மாநில உரிமையும் இணைத்து மக்கள் கருத்தை ஒவ்வொரு மாநிலத்திலும் உருவாக்க வேண்டியதன் அடிப்படையில் ஒற்றை ஆட்சியை நோக்கி பயணிக்கின்ற மதவாத ஆட்சிகளின் சக்திகளை நிச்சயமாக நாம் முறியடிக்க முடியும். அந்த சரியான திசையில், தமிழ்நாட்டு முதலமைச்சர் இறங்கியிருப்பது பாராட்டி வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஏற்கெனவே மாநில கட்சிகள் பல்வேறு மாநிலங்களில் அதிகாரங்களில் இருந்தாலும் கூட அவர்களுக்கு இப்படி ஒரு சிந்தனை உருவாகவில்லை. காரணம், தமிழ்நாடு மட்டும் தான் சமூகநீதி மண்ணாக இருந்திருக்கிறது என்பதையும் நாம் சுட்டிக்காட்டியாக வேண்டும்.

**தலையங்கம்**

## ‘கோட்சே’யின் வாரிசுகள்; எச்சரிக்கிறார் தமிழக முதல்வர்

கோட்சேயின் வாரிசுகளுக்கு இந்திய மண்ணில் இடமில்லை என சூளுரைப்போம் – என்று காந்தி நினைவு நாளையொட்டி தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கை – இன்றைய சூழலில் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. சமூக நீதியால் பக்குவம் பெற்றுள்ள தமிழ் மண்ணில் மதவெறியை விதைக்கும் பா.ஜ.க.வின் சீரழிவு அரசியலை அம்பலப்படுத்துங்கள் என்று தி.மு.க. தோழர்களுக்கு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளதையும் இத்துடன் இணைத்துப் பார்க்க வேண்டும்.

போபால் நாடாளுமன்ற உறுப்பினரான பா.ஜ.க.வைச் சார்ந்த பிரக்யாசிங், நாடாளுமன்றத்தில் கோட்சே தேச பக்தர் என்று பேசியதோடு காந்தி நினைவு நாளில் அவரைப் போல் உருவ பொம்மை செய்து துப்பாக்கியால் சுட்டு மகிழ்ந்தது, சமூக வலை தளங்களில் வைரலாகப் பரவியது. கடந்த ஜன. 30ஆம் தேதி இராஜஸ்தான் குவாலியரில் ‘இந்து மகாசபை’ எனும் அமைப்பு, காந்தியாரைக் கொலை செய்த வழக்கில் தூக்குத் தண்டனை பெற்ற ‘கோட்சே – நாராயணன் ஆப்தே’ இருவர் படத்துக்கும் மலர் தூவி மரியாதை செலுத்திய செய்தியை ‘இந்து’ ஆங்கில நாளேடு (ஜன. 31, 2022) வெளியிட்டிருக்கிறது. சத்தீஸ்கரில் கடந்த டிசம்பரில் ‘வேத’ மத பயங்கரவாதிகள் நடத்திய ‘தர்ம்சன்சாத்’ நிகழ்வில் காந்தியை இழிவுபடுத்திப் பேசிய காலிச்சரன் மகராஜ் உள்ளிட்ட நான்கு பேர் மீது வழக்குப் பதியப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் பயங்கரவாதி காலிச்சரனுக்கு ‘கோட்சே – ஆப்தே பாரத ரத்னா’ விருது வழங்கி இந்து மகாசபை கவுரவித்திருப்பதாகவும் அதே ‘இந்து’ ஏட்டின் செய்தி கூறுகிறது. ஆக, கோட்சேவின் வாரிசுகள் வெளிப்படையாகவே இயங்குகின்றார்கள்.

கோட்சே உள்ளிட்ட காந்தி கொலையில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் மராத்தியப் பார்ப்பனர்கள். கோட்சே ‘வேத மதம்’ என்ற கொடுங்கோல் பார்ப்பனியத்தின் பிரதிநிதி, 1948 நவம்பர் 8ஆம் தேதி நீதிமன்றத்தில் கோட்சே தந்த ஒப்புதல் வாக்குமூலமே இதற்கு வலிமையான சான்று. “என்னுடைய இந்தச் செயல் முற்றிலும் இந்து மதத்தையும் பகவத் கீதையையும் அடிப்படையாகக் கொண்டதுதான். நம்நாடு இந்துஸ்தான் என்ற பெயரில் இனி அழைக்கப்படும்” என்று அவர் பதிவு செய்துள்ளார்.

“தர்மத்தைக் காப்பாற்ற கொலை செய்வது பாவமில்லை; க்ஷத்திரிய தர்மமே கொலை செய்வது தான்” என்று பகவான் கிருஷ்ணன், பாரதப் போரில் அர்ஜுனனுக்கு உபதேசம் செய்ததாகக் கூறுகிறது ‘பகவத் கீதை’. காந்தி எந்த பகவத் கீதையைப் போற்றினாரோ அதன் கொலை தத்துவம் தான் காந்தியின் உயிரையும் பறித்தது. அந்த கோட்சேயின் வாரிசுகள் இப்போது மதவெறியைத் தூண்டிவிட்டு, மக்கள் பிரச்சினைகளை புறந்தள்ளி சீரழிவு அரசிலை நடத்தத் துடிக்கின்றன.

தமிழ்நாட்டில் கட்டாய மதமாற்றம் நடப்பதாக ஒரு கற்பனையை மூலதனமாக்கி அரசியல் நடத்துகிறது பா.ஜ.க. அதைத் தான் தமிழக முதல்வரும் சுட்டிக் காட்டுகிறார். தமிழ்நாட்டில் மத – கடவுள் நம்பிக்கையாளர்களாகக் கருதிக் கொண்டிருப்பவர்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கிறார்கள் என்பது உண்மை. ‘பழக்கம் – சடங்கு – அடையாளம்’ என்ற குறுகிய வட்டத்துக்குள்ளேயே இந்த நம்பிக்கைகள் முடக்கப்பட்டுள்ளன. கடவுள் பார்த்துக் கொள்வார் என்று எந்தப் பிரச்சினையையும் இவர்கள் விட்டு வைப்பது இல்லை. பகுத்தறிவு சிந்தனை கடவுள் – மத நம்பிக்கையாளர்களிடமும் ஊடுறுவி நிற்பதால், வடநாட்டைப் போல இங்கே மதக் கலவரங்கள் நடப்பது இல்லை. கடவுள் – மத மறுப்புப் பிரச்சாரம் நடந்து வரும் தமிழ்நாட்டில் பாபர் மசூதி இடிப்போ – கோயில்கள் உடைப்போ நடப்பது இல்லை. ‘சமூக நீதி’யையும் ‘வாழ்வுரிமை’யையும் இந்து தர்மத்துக்காகக் காவு கொடுக்க தமிழ்நாட்டின் வெகுமக்கள் தயாராகவும் இல்லை. அதனால் தான் பா.ஜ.க. வேறூன்ற முடியாமல் சிக்கித் திணறுகிறது.

இந்தப் பின்னணியில் மதவாத சீரழிவு கொள்கைகளை விதைக்கும் முயற்சிகளும் தீவிரம் பெற்று வரும் நிலையில் அதை முறியடிப்பதில் அனைத்து முற்போக்கு இயக்கங்களுக்கும் முக்கியப் பொறுப்பும் கடமையும் இருக்கிறது. மக்கள் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் மதத்திலோ மத அடையாளங்களிலோ அடங்கியிருக்கவில்லை என்ற கருத்தை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். இந்து அறநிலையத் துறையை சீர்திருத்தம் செய்யவோ, கோயில் பராமரிப்புகள் சிறப்பாக நடத்தவோ அரசுக்கு உரிய கடமை இருக்கிறது. அதை நாம் மறுக்கவில்லை. ஆனால், திராவிடர் இயக்கக் கொள்கைகளை முன்னெடுக்க வேண்டிய கடமையும் தி.மு.க. என்ற அமைப்புக்கு இருக்கிறது. அதன் முன்னணித் தலைவர்கள் குறிப்பாக கட்சிப் பதவி சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளில் இருப்பவர்கள் குறைந்தபட்சம் அடிப்படையான கொள்கைகளைப் புரிந்தவர்களாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்பதை கவலையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். கோடிக் கணக்கில் இருக்கும் உறுப்பினர்களிடம் அதை எதிர்பார்க்க முடியாது தான். ஆனால் முன்னணித் தலைவர்கள் தொலக்காட்சிகளில் கட்சியின் சார்பில் வாதாடக் கூடியவர்கள். மேடைகளில் கருத்துகளைப் பரப்புவோர் குறைந்தது புற மத அடையாளங்களையாவது தவிர்க்க வேண்டாமா? நெற்றியிலும் கைகளிலும் கழுத்திலும் ‘மினுமினுக்கும்’ மத அடையாளங்களிலிருந்து தங்களைத் துண்டித்துக் கொள்ளத் தயாராக இல்லை என்பதை பலரும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ‘மதத்தை அரசியலாக்குவதுதான் தவறு; மத நம்பிக்கை தவறு இல்லை’ என்ற வாதத்தைக்கூட முன் வைக்கலாம். ஆனால், மதவாத அரசியலின் ஊற்று மதத்திலிருந்து தான் தொடங்குகிறது என்பதை முன்னணித் தலைவர்களாவது சிந்திக்க வேண்டாமா? தமிழ்நாட்டில் தேர்தல் அரசியல் களத்தில் நிற்கும் இடதுசாரி அரசியல் தலைவர்கள், மத அடையாளங்களைத் தரிப்பது இல்லையே!

கட்சியிலும், ஆட்சியிலும் எத்தனையோ மாற்றங்களைத் துணிந்து முன்னெடுத்து வருகிறார் தமிழக முதல்வர். எனவே முன்னணித் தலைவர்களிடம் மத அடையாளங்களைத் தவிர்க்கலாம் என்ற கருத்தை தமிழக முதல்வர் வலியுறுத்த வேண்டும் என்பதே நமது கோரிக்கை. தமிழ்நாட்டில் மதத்தின் அடிப்படையில் தொடங்கப்பட்டுள்ள சீரழிவு அரசியலை எதிர்கொள்வதற்கு கொள்கை அடையாளங்கள் மிகப் பெரும் ஆயுதங்களாகும். பெரியார் – அண்ணா – கலைஞர் உள்ளிட்ட தலைவர்கள் நமக்கு விட்டுச் சென்றிருக்கிற பாடமும் இது தான்!

# கட்டாய ‘நீட்’ திணிப்பும் கட்டாய ‘மதமாற்ற’க் கூப்பாடும்

தமிழ்நாட்டில் கட்டாய மதமாற்றம் நடப்பதாக போலி கூக்குரலை எழுப்பிக்கொண்டு பாஜக அரசியல் நடத்தப் பார்க்கிறது. பாஜகவின் அந்த அரசியலுக்கு, தமிழ்நாட்டில் சீண்டுவதற்கு கூட ஆள் இல்லை. அவர்களது கூட்டணிக் கட்சியான அ.இ.அதிமுக கூட அவர்கள் பக்கம் நிக்கத் தயாராக இல்லை. கட்டாய மதமாற்றம் என்று கூறி, நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பாஜக சட்டமன்ற உறுப்பினர் நயினார் நாகேந்திரன் அதிமுக வை சீண்டியிருக்கிறார். உடனே அதிமுகவே வெகுண்டெழுந்து பதிலடி கொடுத்து வருகிறது. பாஜக கூட்டணியே இந்த உள்ளாட்சித் தேர்தலுக்கு வேண்டாம் என்று கூறுகிற அளவிற்கு இவர்களுடைய மதமாற்ற பிரச்சாரம் பா.ஜ.க.வை நெருக்கடிக்கு கொண்டு போய் சேர்த்திருக்கிறது. இதனால், அ.தி.மு.க.விடம் மன்னிப்புக் கேட்கிறேன் என்று சொல்லக்கூடிய நிலைக்கும் அண்ணாமலை வந்துவிட்டார்.

கட்டாய நீட் திணிப்பு, கட்டாய இந்தி திணிப்பு, கட்டாய உரிமை பறிப்புகளை மட்டுமே தமிழ்நாடு ‘திராவிட மண்’ எதிர்க்கும். ஆனால் கட்டாய மதமாற்றம் என்ற போலி கூக்குரல்கள் எடுபடாது என்பதை பாஜக புரிந்து கொள்ள வேண்டும். மைக்கேல்பட்டி என்ற ஊரில் இருக்கும் தூய மேரி பள்ளி 133 ஆண்டுகளாக பெரும்பாலான இந்து மாணவிகளுக்குத் தான் கல்வியை வழங்கி வருகிறது. அங்கே மத மாற்றம் என்ற குற்றச்சாட்டு இதுவரை வந்ததே கிடையாது. இன்னும் சொல்லப்போனால், மைக்கேல்பட்டியில் வாழும் கிராம மக்கள் ஒன்று சேர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒரு மனுவை கொடுத்திருக்கிறார்கள். “எங்கள் கிராமத்தில் மதமாற்றம் நடக்கிறது என்று கட்டாயபடுத்தி வாக்குமூலம் வாங்குகிற முயற்சிகளில் சில வெளி நபர்கள் ஊருக்குள் புகுந்து குழப்பங்களை உருவாக்கி வருகிறார்கள். அவர்களை கிராமங்களுக்குள்ளே விடக்கூடாது. நாங்கள் ஒற்றுமையாகத் தான் இருக்கிறோம்” என்று பொது மக்களே மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்து பாஜகவை ஓரம்கட்டி வைத்திருக்கிறார்கள்.


எங்கே தமிழ்நாட்டில் மதக்கலவரத்தைத் தூண்டி விடுவதாக வழக்குகள் தங்கள் மீது பாய்ந்து விடுமோ என்று பயந்து போன தமிழக பாஜக தலைவர்கள் டெல்லி பாஜகவிடம் சரணடைந்து எங்களை எப்படியாவது இதிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்று வேண்டுகோள் வைத்திருப்பார்கள் போல. அதன் காரணமாக அகில இந்திய பாஜக தலைமை பிற மாநிலங்களைச் சார்ந்த நான்கு பெண்களை தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைத்து மதமாற்றம் நடக்கிறதா என்று விசாரணை நடத்துவதாக மிரட்டி பார்க்கிறது. இந்த மிரட்டல்களுக்கு தமிழ்நாடு ஒருபோதும் அடிபணியாது. சொல்லப்போனால் தமிழ்நாடு அரசு மதக்கலவரத்தை தூண்டும் வகையில் எழுதி, பேசி வருகிற பாஜக தலைவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே தமிழ்நாட்டு மக்களின் கோரிக்கை.

## ‘நீட்’ எதிர்ப்புப் போராட்டம்: கழகத் தோழர்கள் 12 பேர் மீதான வழக்கை இரத்து செய்தது உயர்நீதிமன்றம்

‘நீட்’ தேர்வில் வெற்றி பெறாத நிலையில் அனிதா உயிர்ப் பலி தந்ததைத் தொடர்ந்து ‘நீட்’ இரத்து கோரி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் சென்னையில் பா.ஜ.க. தலைமை அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டம் 2017இல் நடந்தது. தலைமைக் கழகச் செயலாளர் தபசி குமரன், மாவட்டச் செயலாளர் உமாபதி உள்ளிட்ட 12 பேர் மீது காவல்துறை பொது அமைதியைக் குலைத்ததாக வழக்கைப் பதிவு செய்தது.

போராட்டம் - சட்டம் வழங்கியுள்ள ஜனநாயக உரிமைப்படித்தான் நடந்தது; சட்டம் ஒழுங்கு சீர்குலைவோ, பொது மக்களுக்கு இடையூறோ ஏதும் நிகழவில்லை என்று கழக சார்பில் வழக்கறிஞர் திருமூர்த்தி வாதிட்டார். நீதிபதி சதீஸ்குமார், வழக்கறிஞர் வாதத்தை ஏற்று 12 தோழர்கள் மீது தொடரப்பட்ட வழக்கை இரத்து செய்தார்.

## காந்தியாருக்கு நினைவுச் சின்னம்



காந்தியாருக்கு ஞாபகச் சின்னம் ஏற்படுத்துவது அவசியம், அது நிரந்தரமான தாகவும், அதிசயமான பயனுள்ளதாகவும் இருக்க வேண்டும். அதற்கு என் தாழ்மையான யோசனை :

* இந்தியாவுக்கு, ‘ஹிந்துஸ்தான்’ என்கிற, பெயருக்குப் பதிலாக – ‘காந்தி தேசம்’ அல்லது ‘காந்திஸ்தான்’ என்று பெயரிடப்படலாம்.
* இந்து மதம் என்பதற்குப் பதிலாக – ‘காந்தி மதம்’ அல்லது ‘காந்தினிசம்’ என்பதாக மாற்றப் படலாம்.
* இந்துக்கள் என்பதற்குப் பதிலாக – ‘மெய்ஞ்ஞானிகள்’ அல்லது ‘சத்ஞானஜன்’ என்று பெயர் மாற்றப்படலாம்.
* காந்தி மதக் கொள்கையாக இந்தியாவில் ஒரே பிரிவு மக்கள்தான் உண்டு ; வருணாசிரம தர்மமுறை அனுசரிக்கப்பட மாட்டாது. ஞானமும் (அறிவும்) பக்ஷமும் (அன்பும்) அடிப்படையாகக் கொண்டது; சத்து அதாவது சத்தியமே நித்தியானது என்பதான சன்மார்க்கங்களைக் கொண்டதாகும் என்பதாக ஏற்படுத்தி, கிறிஸ்து ஆண்டு என்பதற்குப் பதிலாக ‘காந்தி ஆண்டு’ என்று துவங்கலாம்.

இப்படிப்பட்ட காரியங்கள் செய்வதனால்தான், புத்தர், கிறிஸ்து, முகம்மது முதலிய பெரியார்களுக்குக் காந்தியார் ஒப்பானவராகவும், இன்றைய நிலைமைக்குத் தோன்றிய ஓர் சீர்திருத்த மகானாகவும் உலகமே கருதும்படியான நிலை ஏற்படும் ; உலக மக்களால் நாம் நன்கு மதிக்கப்படுவோம்.

**குடி அரசு** – 14.02.1948

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி விளக்கம் (2)

# சர்ச்சில் – மெக்காலேவை பார்ப்பனர்கள் எதிரிகளாக சித்தரித்தது ஏன்?

***ஆப்பிரிக்க நாடுகளுக்கு சுதந்திரம் தரலாம்; ஆனால் இந்தியாஹவக்கு தருகிற சுதந்திரம் அந்நாட்டு 65 மில்லியன் தாழ்த்தப்பட்ட மக்களை பார்ப்பனர்களுக்குஅடிமைகளாகவே பயன்படும் என்று சர்ச்சில் பேசினார்.***

“வைக்கம் போராட்ட வெற்றி விழா நடக்கிறது. பெரியார் 23.11.1925இல் காங்கிரசில் இருந்து வெளியேறுகிறார். 27 ஆம் தேதி வெற்றி விழா நடைபெறுகிறது. அதில் பெரியார் தான் தலைமை தாங்குகிறார். அந்த மாநாட்டிற்கு வெளியில் இருந்து வந்து கலந்து கொண்டது பெரியார் ஒருவர்தான். வைக்கத்திற்காக இரண்டு முறை சிறை சென்றவரும் பெரியார் தான். கிரிமினல் வழக்கில் கைதானவரும் பெரியார் தான். மற்றவர்களெல்லாம் சிவில் வழக்கில் தான் கைதானார்கள். பெரியாரை விலங்கு போட்டு வைத்திருந்தார்கள். இதை பற்றி பழ.அதியமான் ஆய்வு செய்து எழுதியிருக்கிறார். அதன் தொடர்ச்சியாக நடந்த பரப்புரை தான் மதமாற்றத்தில் கொண்டு வந்து விட்டது பெரியாரை.

இஸ்லாமிற்கு மாறலாம் என்று இரண்டு நிகழ்வுகளில் கூறுகிறார். ஒன்று கண்ணனூரில் நடைபெற்ற கூட்டம். மற்றொரு மாநாட்டிலும் குறிப்பிடுகிறார். அந்த செய்திகள் இந்த நூலில் தொகுக்கப்பட்டுள்ளது. கண்ணனூருக்குப் பிறகு நடைபெற்ற நிகழ்வில் அனைத்து மதத் தலைவர் களையும் அழைக்கிறார்கள். சீக்கியர், பௌத்த பிக்கு, இஸ்லாமியர், கிருத்துவ பாதிரியார் என அனைவரும் உரையாற்றுகிறார்கள். இவர்கள் உரையாற்றிய பின் ‘எந்த மதத்திற்கு செல்லலாம் என்று பெரியார் பேசுகிறார்’. அப்போது இஸ்லாமை பரிந்துரைக் கிறார். அன்றே 400 பேர் இஸ்லாமிற்கு மதம் மாறியதாக பின்னாட்களில் எழுதுகிறார். “எங்கள் ஊரில் குறிப்பிட்ட சிலர் தான் மதம் மாறுவார்கள். ஆனால் இங்கு தான் ஒரு சமூகமே (ஜாதியே) மதம் மாறியிருக்கிறது. மகிழ்ச்சி” என்று பேசுவார். அதே பேச்சில், “பாலக்காடு, கல்பாத்தி என்ற ஊரில் ஒரு சிக்கல் நிலவுகிறது. அரசு உத்தரவே இருந்தாலும் தாழ்த்தப்பட்டவர்கள் வீதியில் நடக்கக்கூடாது என்று வைத்திருந்தார்கள். அப்போது அந்த பகுதி சென்னை மாகாணத்துடன் இருந்தது. அதில், தாழ்த்தப்பட்டவராக இருந்து, இஸ்லாமியராக மதம் மாறி ஒருவர் நடந்து போகிறார். எந்த சிக்கலும் ஏற்படவில்லை. வைக்கத்தில் யாரை நடக்கவிட வில்லை? இஸ்லாமியரையா? கிருத்துவர்களையா ? இந்துக்களைத் தான் நடக்கவிடவில்லை” என்று இந்து மதக் கொடுமைகளை விளக்கி பேசுகிறார். அந்த மதம் நமக்கு வேண்டாம் என்கிறார்.

“இந்து மதத்தை ஒழிப்பது என்பது, இந்து மதத்தின் அதிகாரங்களை, சாஸ்திரங்களை நிராகரிப்பது தான்” என்று அம்பேத்கர் கூறினார். வேலூர் கூட்டத்தில், “அம்பேத்கர் பேச முடியாத (கருத்துகளடங்கிய) அந்த நூலை வெளியிட்டார். அந்த கமிட்டியில் நானும் சிறிது நாள் துணைத் தலைவராக இருந்திருக்கிறேன். இங்கிருக்கும் பார்ப்பனர்கள் அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள். அவன் நாஸ்திகன் அவனை ஏன் அழைக்கிறீர்கள் என்று கடிதம் எழுதினார்கள். அதன் பின் என்னை அழைப்ப தில்லை. நானும் அதைப் பற்றி கவலைப்படவில்லை. அம்பேத்கரை அழைத்தார்கள். ஆனால் அங்கு அந்த உரையை பேச விடவில்லை. அதை புத்தகமாக வெளியிட்டார். அதை பார்த்து நான் இதை தமிழில் மொழி பெயர்த்து வெளியிடலாமா என்று கேட்டேன், மகிழ்ச்சியாக வெளியிடுங்கள் என்று கூறினார்” என்று அந்த உரையில் குறிப்பிடுவார். அந்த புத்தகத்தை தமிழில் கொண்டு வர வேண்டும் என்ற ஆர்வம் பெரியாருக்கு இருந்தது. “ஜாதியை ஒழிக்கும் வழி” என்று மொழி பெயர்த்து வெளியிட்டார். அது தற்போது பல பதிப்புகளை கண்டு விட்டது. என்னைப் பொருத்தவரை இந்த நூலைத் தான் சிறந்த நூலாக கருதுகிறேன். பல ஆய்வுகளை செய்து அம்பேத்கர் அதை எழுதியிருக்கிறார். “காந்தியும் காங்கிரசும் தீண்டத்தகாதாருக்கு செய்தது என்ன ?" என்பதைப் பற்றி எழுதியிருப்பார். பிற்காலத்தில் விரிவாக எழுதியிருப்பார் இதில் சுருக்கமாக குறிப்பிட் டிருப்பார். “நெய் ஊற்றி சாப்பிட்டதற்கு, ஊர்வலம் சென்றதற்கு” இப்படி என்னென்ன சிக்கல்கள் தலித் மக்களுக்கு நடந்தது, ஏன் நடந்தது என்பதைப் பற்றி யெல்லாம் அதில் எழுதியிருப்பார். இவற்றை யெல்லாம் குறிப்பிட்டு “நான் இந்துவாக உரையாற்றுகிற கடைசி உரை இது தான்” என்றும் எழுதியிருப்பார். எனவே இந்து மத நிராகரிப்பு என்பது, அதை ஏற்றுக்கொள்ள மறுப்பது அல்லது அதை சரியாகப் புரிந்து கொள்வது தான்.



1931இல் பல நிகழ்வுகள் நடைபெற்றன. ஒன்று வட்டமேசை மாநாடு, அதற்குப் பிறகு உப்பு சத்தியா கிரகம் என்று காந்தி நடத்துகிறார், கைது செய் கிறார்கள். அடுத்து என்ன? விடுதலை செய்யக் கூறி போராட்டம் தான். உண்மையைச் சொன்னால் காந்தி - இர்வின் ஒப்பந்தம் என்பது சரணாகதி ஒப்பந்தம் தான். சென்னையில் நடராசன்-தாளமுத்து மாளிகை உள்ள இடத்தில் இருக்கும் சாலைக்கு காந்தி இர்வின் சாலை என்று பெயரே வைத்துள்ளார்கள். ஆங்கிலேயர்கள் ஒரு சில நிபந்தனையுடன் காந்தியை விடுதலை செய்கிறார்கள். அதில் ஒன்று என்னவென்றால் வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்பது தான். அதன் பின் தான் வட்டமேசை மாநாட்டில் காந்தி கலந்து கொள்கிறார். அப்போது சர்ச்சில்க்கு அதிர்ச்சி ஒன்று ஏற்படுகிறது. அவரையெல்லாம் இந்திய விடுதலைக்கு எதிராக இருந்தார் என்று கூறுவார்கள். ஆனால் அவர் உண்மையை புரிந்தவராக இருந்தார். மார்ச் 5 இந்த ஒப்பந்தம் நடந்தவுடன், 18ஆம் தேதி இலண்டனில் ஒரு கூட்டம் நடைபெறுகிறது. ‘ஆல்பர்ட் ஹால்’ என்ற புகழ்பெற்ற அரங்கில் அந்த கூட்டம் நடைபெறுகிறது. அந்த கூட்டத்தில் வின்ஸ்டன்ட் சர்ச்சில் உரையாற்றுகிறார். ‘Our duty in India’ என்ற தலைப்பில் உரையாற்றுகிறார். அப்போது இங்கிலாந்து கட்டுப்பாட்டில் இருக்கும் அனைத்து நாடுகளுக்கும் குடியேற்ற அனுமதி அளிப்பதாக இங்கிலாந்து முடிவுசெய்திருக்கிறது. இந்தியாவும், முதலில் விடுதலை கேட்டு தீர்மானம் இயற்று கிறார்கள். பிறகு குடியேற்றம் தான் கேட்டார்கள். DOMINIAN அந்தஸ்து என்று கூறுவார்கள். அதைத்தான் கேட்டார்கள். முழு விடுதலையெல்லாம் கேட்கவில்லை. அப்போது கனடா, கென்யாவிற் கெல்லாம் கொடுப்பதாக முடிவு செய்திருந்தார்கள். சர்ச்சில் அந்த உரையில், “அவர்களுக்கெல்லாம் விடுதலை கொடுக்கலாம் இந்தியாவிற்கு கொடுக்காதீர்கள்” இதை வைத்துத்தான் இந்திய விடுதலைக்கு எதிரானவர் என்று பேசுகிறார்கள். அதே உரையில் அதற்கான காரணமாக, “காந்தியின் அந்த போராட்டம் விடுதலை போராட்டமல்ல, நடக்கிற போராட்டம், பார்ப்பனர்களை பிரிட்டிஷார் இடத்தில் ஏற்றி வைக்கிற போராட்டமே தவிர விடுதலைக்கான போராட்டமல்ல. (Substitute brahmins in the place of British)” என்று குறிப்பிடுகிறார். “அதை மட்டும் கொடுத்துவிடுவீர்களேயானால், 65 மில்லியன் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை அடியோடு நாசமாகிவிடும். அவர்களின் நிலை தற்போது இருப்பதை விட மிகவும் மோசமாகவிடும். அதை செய்து விடாதீர்கள்” என்று பேசுகிறார். அதற்குப் பிறகு தான் வட்டமேசை மாநாடு நடக்கிறது. அம்பேத்கர் இரட்டை வாக்குரிமை, தனித்தொகுதி கேட்கிறார். இந்த உண்மையைக் கூறியதால் சர்ச்சிலை இந்தியர் களுக்கு எதிரியாகக் காட்டினர். இதே போல தான் மெக்காலேவையும் எதிரியாக காட்டினர். பிரிட்டிஷ்காரர்கள் சுரண்டல்காரர்கள் தான். ஆனால், அதற்கு மேல் மக்கள் மீது ஒரு அபிமானம் இருந்தது. கருப்பர்கள் நாடான ஆப்பிரிக்காவிற்கு விடுதலை கொடுப்பதற்கு தடை யில்லை. கருப்பர்களுக்கு கொடுக்கலாம் தடை யில்லை. இந்தியாவில் 65 மில்லியன் தாழ்த்தப் பட்டவர்கள் இருக்கிறார்கள் அவர்களை அழித்து விடுவார்கள் என்பதே சர்ச்சிலின் நோக்கம். காந்தி, தனித்தொகுதி, இரட்டை வாக்குரிமை முறையை வட்டமேஜை மாநாட்டில் எதிர்த்தார்.

இரட்டை வாக்குரிமை, தனித்தொகுதி முறை என்ன மாற்றத்தை கொடுத்திருக்கும் என்பதைப் பயன்படுத்தி பார்த்திருந்தால் தான் தெரிந்திருக்கும். ஆனால், தற்போது இருக்கும் நிலையை விட ஓரளவிற்காவது, தலித் மக்களின் கோரிக்கையை முன் வைத்திருக்கிற பிரதிநிதிகள் கிடைத்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். பெரியார் சிறையில் இருந்து வந்த பின் 1940இல் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில், “இரட்டை வாக்குரிமை, தனித் தொகுதி முறை சென்னை மாகாணத்திற்காவது வேண்டும்” என்று தீர்மானம் போடப்பட்டது. இப்படி படிப்படியாகத்தான் நகர்கிறது. அதற்கு முன் இருவருமே கோவில் நுழைவு போராட்டத்தை முன்னெடுக்கிறார்கள். ஜே.எஸ் கண்ணப்பர், 1927இல் திருவண்ணாமலையில் நடத்துகிறார், இராமநாதன் திருச்சியில் நடத்துகிறார், கி.ஆ.பெ விஸ்வநாதம் மயிலாடுதுறையில் நடத்துகிறார். இப்படி ஆங்காங்கே சுயமரியாதை இயக்கத் தோழர்கள் மக்களை அழைத்துக் கொண்டு கோவில் நுழைவுப் போராட்டத்தை நடத்துகிறார்கள். காலாராம் கோவில் நுழைவுப் போராட்டத்தை 1930இல் புரட்சியாளர் அம்பேத்கர் செய்தார். தனிக் கிணற்றில் நீர் எடுக்கும் போராட்டம். இப்படி பலவற்றை செய்தனர். ஒரு கட்டத்தில் கோவில் நுழைவு வேண்டாம், தனிக் கிணற்றில் நீர் எடுப்பதும் வேண்டாம், எங்களுக்கு இந்த மதமே வேண்டாம் என்பதை அழுத்தமாக பேசத் தொடங்கினார்கள்.

விரும்பியோ விரும்பாமலோ நம்மை இந்து மதத்தில் இணைத்து வைத்திருக்கிறான். இணைத்து வைத்திருப்பது மட்டுமல்ல அதன் காரணமாக நமது உரிமைகளை பறிக்கிறான். சூத்திரன் துறவி ஆக முடியாது என்று நீதிமன்றம் தீர்ப்பு தருகிறது. அதே போல சூத்திரனுக்கு, மனைவி, வைப்பாட்டி இரண்டும் ஒன்று தான். ஏனென்றால் சூத்திரனுக்கு திருமணம் செய்யும் உரிமை கிடையாது. திராவிடர் கழகத் தலைவர் மதிப்பிற்குரிய அய்யா வீரமணி அவர்களின் மாமனார் மாமியார் திருமண வழக்கு உச்சநீதிமன்றம் சென்றது. அதில் அப்படித்தான் தீர்ப்பு வழங்கினார்கள். இதை பெரியார் வேடிக்கையாகக் கூறுவார், “ஒரு கல்லில் இரண்டு குருவி என்று கூறுவார்கள், ஆனால் மூன்று குருவி அடித்து விட்டான்” என்று கூறுவார். ஏனென்றால், சுயமரியாதை திருமணம் செல்லாது, சூத்திரனுக்கு மனைவியும், வைப்பாட்டியும் ஒன்றுதான், அதனால் சொத்தில் மட்டும் உரிமை உண்டு என்று தீர்ப்பு அளித்தார்கள். இவற்றையெல்லாம் பார்த்து விட்டுத்தான் இப்படிபட்ட மதம் எங்களுக்கு வேண்டாம் இதை விட்டு வெளியேறு வோம் என்ற சிந்தனைக்கு வந்தார்கள். அதற்குப் பின்னால் எடுத்த முயற்சிகளைத்தான் இந்த புத்தகத்தில் கொடுக்கப் பட்டுள்ளது.

காந்தியைப் பற்றி எப்போதும் பெரியாருக்கு ஒரு கருத்து இருந்துகொண்டே இருந்தது. காங்கிரசில் இருந்து வெளியேறினாலும் காந்தியை ஏற்றுக் கொண்டவராக இருந்தார். அந்த சமயத்தில், 1926இல் மைசூரில் காந்தி உரையாற்றும்போது வர்ணாஸ்ரமத்தை ஆதரித்துப் பேசுகிறார். அதனால் காந்தியின் மீது பெரியாருக்கு கோபம் வந்துவிடுகிறது. அதன்பின் தான் “நண்பர் காந்தி” என்று எழுதுகிறார். அதனால் பிரச்சனை செய்கிறார்கள். மகாத்மா என்று எழுதச் சொல்லி. “சாதாரண ஆத்மாவே இல்லை என்கிறேன் இதில் எங்கே மகாத்மா வந்தது” என்று கேட்டார் பெரியார்.

(தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# மருத்துவக் கட்டமைப்பில் 'திராவிடன் மாடலு'க்குக் கிடைத்த மகத்தான வெற்றி

தமிழ்நாட்டில் சுகாதார கட்டமைப்பு வசதிகள், ஏனைய மாநிலங்களை விட வெற்றிகரமாக செயல்படுவதற்கான காரணங்கள் என்ன ? கடந்த பல ஆண்டுகளாக தமிழ்நாட்டில் பின்பற்றப்பட்டு வரும் "திராவிடன் மாடல்" அடிப்படையில் உருவாக்கப்பட்ட சமூகநீதிக் கொள்கைகளே இந்த வெற்றியை ஈட்டித் தந்திருக்கின்றன என்பதை விளக்கி, இந்து ஆங்கில நாளேட்டில்(ஜனவரி 27, 2022) சிறப்பான கட்டுரை ஒன்று வெளி வந்திருக்கிறது. சென்னை அரசு மருத்துவமனை யில் மருத்துவராகவும், மருத்துவக் கல்லூரியில் பேராசிரியர்களாகவும் பணியாற்றும் டாக்டர் சக்திராஜன் இராமநாதன் (சிறுநீரகத் துறை), டாக்டர் சுந்தரேசன் செல்லமுத்து (புற்றுநோய் கதிர்வீச்சுத் துறை) ஆகியோர் இணைந்து அக்கட்டுரையை எழுதியுள்ளனர்.

மருத்துவப் படிப்புக்கான அகில இந்திய ஒதுக்கீட்டில் பிற்படுத்தப்பட் டோருக்கான 27 சதவீத ஒதுக்கீடு சட்டப்படி செல்லத்தக்கதே என்று கடந்த வாரம் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பில் தகுதி குறித்து வெளியிட்டுள்ள கருத்துக்களின் வெளிச்சத்தில் இக்கட்டுரை எழுதப்பட்டு இருக்கிறது. திராவிடம் நாட்டையே கெடுத்துவிட்டது என்ற கூக்குரல்கள் அர்த்தமற்றது என்பதற்கான சான்றாதாரங்கள் அவ்வப்போது வெளி வந்து கொண்டே இருக்கின்றன. தகுதி என்பது பொதுப் போட்டியில் பெறும் மதிப்பெண்களில் இல்லை. மாறாக நேர்மை, மக்கள் சேவையில் அர்ப்பணிப்பு என்பதே தகுதிக்கான அடையாளம்; அதை சமூகச் சூழலோடு பொருத்திப் பார்க்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் விளக்கி இருக்கிறது. இதே பார்வையில் தான் தமிழ்நாட்டில் திராவிட ஆட்சிகள் தகுதியையும், இட ஒதுக்கீட்டுக் கொள்கையையும் செயல்படுத்தி இந்தியாவிற்கு முன்னோடி மாநிலமாக தமிழ்நாட்டைக் கட்டமைத்துள்ளனர். என்றக் கருத்தை உரிய சான்றுகளுடன் இந்தக் கட்டுரை நிறுவி இருக்கிறது.

குறிப்பாக, அரசு மருத்துவமனைகளில் பணியில் இருக்கும் அரசு மருத்துவர் களுக்கு இட ஒதுக்கீடு வழங்கும் சமூக நீதிக் கொள்கையை தமிழ்நாட்டில் திராவிட ஆட்சிகள் தொடர்ந்து பின்பற்றி வருவதை கட்டுரை சுட்டிக்காட்டுகிறது. மேல் பட்டப்படிப்பு (Post Graduate), உயர் சிறப்பு மருத்துவ படிப்பு (Super Speciality) படிப்புகளுக்கு அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு 50% இட ஒதுக்கீடு வழங்கும் முற்போக்கு சிந்தனையில் உருவாக்கப்பட்ட கொள்கை தான், மருத்துவக் கட்டமைப்பில் மிகப் பெரிய மாற்றங்களை தமிழ்நாட்டில் உருவாக்கி இருக்கிறது. பொது மருத்துவத்துறை பரவலாக விரிவடைவதற்கு இதுவே அடிப்படை. இதனால்தான் மகப்பேறு, பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறப்பு உயர்மட்ட மருத்துவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்தது. 40 ஆண்டுகளுக்கு முன்பு, மாவட்ட மருத்துவமனைகளில் இத்தகைய உயர் சிறப்பு மருத்துவர்களுக்கு கடும் பற்றாக்குறை நிலவியது. 1960,70 களில் சென்னை தலைமை மருத்துவமனையில் பல சிறப்பு மருத்துவத் துறைகள் உருவாக்கவும் இது வழி வகுத்தது. பின்னர் 1990 களில் பெரும் நகரங்களையும் கடந்து, இரண்டாம் நிலை நகர மருத்துவமனைகளிலும் சிறப்பு உயர் மருத்துவ நிபுணர்களின் சேவை கிடைக்கத் துவங்கியது. இன்று தமிழ்நாட்டில் 900 உயர் மருத்துவ சிறப்பு நிபுணர்கள் பல்வேறு துறைகளில் தங்களது சேவைகளை வழங்கி வருகிறார்கள். இந்த எண்ணிக்கை இந்திய ஒன்றியத் திலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. அய்ரோப்பிய நாடுகளிலேயே விரல் விட்டு எண்ணக்கூடிய சில நாடுகளில் மட்டுமே இந்த எண்ணிக்கை இருக்கிறது.

மருத்துவ கட்டமைப்புக்காக, தமிழ்நாட்டில் கொள்கையை உருவாக்கியவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு, இட ஒதுக்கீட்டுக்கு விண்ணப்பிக்கும் அரசு மருத்துவர்கள் கிராமத்தில் மூன்று ஆண்டுகள் பணியாற்ற வேண்டும் என்ற நிபந்தனையை விதித்தார்கள். இதனால் கிராமப்புறங்களில் பணியாற்ற மருத்துவ பட்டதாரிகள் முன்வந்தனர். கிராமப்புறங்களில் மருத்துவர் பற்றாக்குறை என்ற நிலை நீங்கியது. மற்றொன்று, மேல் பட்ட படிப்பு, உயர் சிறப்பு மருத்துவ நிபுணர் படிப்புகளில் இட ஒதுக்கீட்டின் கீழ் தேர்வு செய்யப்பட்ட அரசு மருத்துவர்கள் பதவி ஓய்வு பெறும் வரை அரசு மருத்துவமனைகளிலேயே பணி புரிய வேண்டும் என்று சட்டப்பூர்வ ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது ஆகும். அதனால் கூடுதல் ஊதியத்துக்காக தனியார் மருத்துவமனைக்கும், வெளிநாடுகளுக்கும் செல்வது பெருமளவு தடுக்கப்பட்டது. இப்படி ஒரு தனித்துவமான ஒப்பந்தமுறை இந்திய ஒன்றியத்தில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை.

மிகவும் திறமையான மாணவர்களின் புகலிடங்களாக கருதப்படும், சென்னை அரசு மருத்துவமனை மற்றும் சென்னை அய்.அய்.டி இரண்டு நிறுவனங்களையும் ஒப்பிட்டால், சென்னை மருத்துவமனை, தமிழ்நாட்டுக்கும், மக்களுக்கும், மருத்துவத் துறைக்கும் மகத்தான சேவைகளை வழங்கி வருவதை புரிந்து கொள்ள முடியும். காரணம் மருத்துவத் துறையில் உருவாக்கப்பட்ட சமூகநீதிக்கான கொள்கைதான்.

**சீர்குலைக்கும் மருத்துவக் கவுன்சில் :** இதற்கு நேர் மாறாக நீட் தேர்வு முறையும், இந்திய மருத்துவக் கவுன்சில் விதி முறைகளில் கொண்டுவரப்பட்ட திருத்தமும் (9ஆவது திருத்தம்) அமைந்துள்ளது. மருத்துவக் கவுன்சில் விதிமுறை களில் செய்யப்பட்ட மாற்றங்களால் கிராமத்தில் பணிபுரியும் முக்கியத்துவம் மோசமான அளவில் குறைக்கப்பட்டது. மேல் மருத்துவப் பட்டப் படிப்பிற்கான 50% இட ஒதுக்கீட்டை நீக்கிவிட்டு, டிப்ளமோவிற்கு மட்டுமே இட ஒதுக்கீடு என்ற நிலையை இந்திய மருத்துவ கவுன்சில் உருவாக்கிவிட்டது. தொடர்புடை யவர்களை கலந்து ஆலோசிக்காமலே எடுக்கப்பட்ட குழப்பமான முடிவுகள் இவை.

இத்தனைக்கும் மருத்துவக் கவுன்சில் சட்டபூர்வமான அங்கீகாரம் பெற்ற அமைப்பும் அல்ல. அது கண்காணிப்பு அமைப்பே தவிர, கொள்கை வகுக்கும் அமைப்பு அல்ல.

இந்தத் திருத்தத்தை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில், அரசு மருத்துவமனைகளில் பணியில் இருக்கும் மருத்துவர்களுக்கு இட ஒதுக்கீடே கூடாது என்று ஒன்றிய அரசு மனு போட்டது. இன்னும் அதிர்ச்சிக்குரிய ஒன்றாகும். தகுதி குறித்த தவறான கண்ணோட்டமே இட ஒதுக்கீட்டிற்கு எதிராக (அகில இந்திய கோட்டா மற்றும் அரசுப் பணி மருத்துவர்களுக்கு) இத்தகைய மனுக்களை தாக்கல் செய்வதற்கான காரணம்.

கிராமப்புறங்களில் மருத்துவப் பணி செய்தால் இட ஒதுக்கீட்டு முறையினால் பயன்பெறலாம் என்ற நடைமுறையை நீக்கிவிட்டு மருத்துவம் படித்த பட்டதாரிகளை கட்டாயமாக கிராமங்களில் பணியாற்ற வேண்டும் என்று நிர்ப்பந்திப்பது எந்தப் பலனையும் தராது. மருத்துவர்கள் கிராமங்களுக்கு பணிபுரிய வருவது இல்லை என்று ஒப்பாரி வைப்பதால் என்ன பயன் ? 'ஆயுஷ்' என்ற மாற்று இந்திய மருத்துவப் பட்டதாரிகளை கிராமங்களில் நியமிக்கப் போவதாக கூறுவதெல்லாம், வெற்று உணர்ச்சி அறிவுப்புகள் தானே தவிர, நடைமுறைக்கு பயன் தராது. மருத்துவ சங்கம் தொடர்ந்த வழக்கில், சென்னை உயர்நீதிமன்றம் அரசு பணியில் உள்ள மருத்துவர்களுக்கு சிறப்பு உயர் மருத்துவப் படிப்புகளில் 50% இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறது. தகுதி, திறமை குறித்து இப்போது உச்சநீதிமன்றம் தந்திருக்கும் விளக்கத்தின் அடிப்படையைக் கருத்தில் கொண்டு ஒன்றிய அரசு தனது கருத்தை மாற்றிக் கொள்ள முன்வரவேண்டும் என்ற கருத்தை மருத்துவர்கள் கட்டுரையில் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

**தமிழில் : 'இரா'**

## பெண் மருத்துவரின் நன்றி உணர்வு: பெரியார் தொண்டரின் உருக்கமான கடிதம்

மேட்டுப்பாளையம் மூத்த பெரியார் தொண்டர் தி.வி.க. தோழர் பா. ராமச்சந்திரன் எழுதியுள்ள கடிதம்.

அன்புடையீர் வணக்கம்,

மேட்டுப்பாளையத்தில் பல் மருத்துவராக இருக்கும் டாக்டர் மனோன்மணி அவர்கள், என் வயது முதிர்வு காரணமாக கொள்கை உணர்வோடு உதவி வருகிறார். சிகிச்சைக்காக பல முறை கருப்புச் சட்டையுடன் செல்வேன். பெண் ஏன் அடிமையானாள்? பெண்களின் முன்னேற்றம் குறித்த சிறு சிறு பெரியார் எழுதிய நூல்களை வாசிக்கக் கொடுப்பேன் . அவர் ஆர்வமாக வாங்கிக் கொள்வார். கடந்த ஆண்டு நமது இயக்க காலண்டரைக் கொடுத்தேன் . பலரும் பார்க்கின்ற இடத்தில் வைத்தார். நான் பலமுறை பல் சிகிச்சைக்காக போகும்போது என்னிடம் பணம் வாங்குவதைத் தவிர்த்து விடுவார். கடைசியாக எனது கீழ் வரிசை பல்லை எடுத்து விட்டு புதியதாக பல் செட்டு வைக்க வேண்டிய நிலைமை வந்தது. அந்த சிகிச்சையும் சரி செய்து விட்டார். அதற்குரிய கட்டணத்தை வாங்க மறுத்து, உங்களைப் போன்ற மூத்த பெரியாரின் தொண்டருக்கு சிகிச்சை அளித்ததை நல்ல வாய்ப்பாக மனநிறைவாகக் கருதுகிறேன் என்று கூறி விட்டார்.

பெரியார் என்ற கொள்கை உணர்வு எத்தனை வலிமையானது என்பதை டாக்டர் மனோன்மணி உணர்த்திவிட்டார். அந்த உணர்வோடு பெரியார் கொள்கைகளைத் தொடர்ந்து இன்று வரை பரப்பிவரும் திராவிடர் விடுதலைக் கழகத்தின் வார ஏடான

'புரட்சிப் பெரியார் முழக்க'த்தின் வளர்ச்சி நிதியாக 1000 ரூபாய் தருகிறேன்.

வாழ்க பெரியார்.

பா. ராமசந்திரன் ,

மேட்டுப்பாளையம், கோவை மாவட்ட தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்.

## கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் புதிய வெளியீடுகள்

கருஞ்சட்டைப் பதிப்பகம் தொடர்ந்து திராவிடர் இயக்கக் கொள்கைகளைப் பரப்பும் நூல்களை வெளியிட்டு வருகிறது. அண்மையில் வெளி வந்துள்ள புதிய வெளியீடுகள்:

• ஆதிப் பெண்ணின் அடிதடி - ஓவியா • குறளும் கீதையும் - அருள்மொழி மற்றும் சுப. வீரபாண்டியன் • திருக்குறளில் இந்து சனாதன மறுப்பு - வெற்றிச் செல்வன் • திராவிடர் விவசாய தொழிலாளர் சங்கம் - பெரியார் சரவணன் • ஏன், பெரியார் மதங்களின் விரோதி? - வெற்றிச் செல்வன் - உதய குமார் • இடைவேளை - சுப. வீரபாண்டியன் (நாவல்) • ஆளுமைகள் சாரதாதேவி, குண. சந்திரசேகர், இக்லாஸ் உசேன். தொடர்புக்கு : 9840336688

## திருப்பூரில் இல்லத் திறப்பு நிகழ்வு

திருப்பூர் ஆத்துப்பாளையம் பகுதியில் கழகத் தோழர் மதன் இல்லத் திறப்பு விழா 20.01.2022 வியாழன் காலை 11.00 மணி அளவில் நடைபெற்றது.

கழகப் பொருளாளர் துரைசாமி, மாவட்டத் தலைவர் முகில்ராசு முன்னிலையில் நடைபெற்ற இத்திறப்பு விழா எந்தவிதமான பார்ப்பனப் பண்பாட்டுச் சடங்குகள், மூட நம்பிக்கைகள் சார்ந்த நிகழ்வுகளும் இன்றி மிக எளிமையாக நடைபெற்றது. குடும்பத்தின் குழந்தைகள் பெரியார் பிஞ்சுகள் மேகன் பிரபு, அஸ்வின் ஆகியோர் இல்லத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர்.

இல்லத் திறப்பின் மகிழ்வாக மதன் கழக ஏடான 'புரட்சிப் பெரியார் முழக்க'த்திற்கு வளர்ச்சி நிதியாக ரூ1000/= (ரூபாய் ஆயிரம் மட்டும்) மாவட்டத் தலைவர் முகில்ராசுவிடம் வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட அமைப்பாளர் சங்கீதா, மாநகர அமைப்பாளர் முத்து , பரந்தாமன், விசய் - வீரலட்சுமி, மாரிமுத்து, அய்யப்பன், சந்தோஷ், சிரீசா, பிரபு-சுபாஷினி, கிஷோர், ஜெகன்-காயத்ரி, ராஜா, துரை, கௌரிசங்கர், திருமூர்த்தி, வினோத், யாழினி, யாழிசை ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கழக ஏட்டுக்கு 400 சந்தாக்கள் : மேட்டூர் வழி காட்டுகிறது

சேலம் (மேற்கு) மாவட்ட மேட்டூர் கழகம் சார்பாக கழக ஏடான 'புரட்சிப் பெரியார் முழக்க'த்துக்கு முதல் தவணையாக 400 சந்தாக்களையும் அதற்குரிய கட்டணம் ரூபாய் ஒரு இலட்சத்தையும் மேற்கு மாவட்ட செயலாளர் கழகச் செயல் வீரர் ஜி. கோவிந்தராஜ் அனுப்பியுள்ளார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.

மேட்டூரைப் பின்பற்றி,தோழர்களே, முழக்கம் சந்தா சேர்ப்பு இயக்கத்தைத் தீவிரப்படுத்துங்கள்!

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 03rd February 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN